**தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்**
**எண்.1 ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை, 8வது கீழ் தளம்,**
**சைதாப்பேட்டை, சென்னை—600 015.**
**இணையதள முகவரி : www.forests.tn.gov.in**
**தொலைபேசி எண். 044-2434 1251**

**விளம்பர எண். 2/2019** **நாள் : 30-11-2019**

## அறிவிக்கை – வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்

தமிழ்நாடு வனச்சார்நிலைப் பணிகளில் அடங்கியுள்ள வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிகளுக்கான காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் செய்வதற்கான இணையவழி தேர்விற்கு **இணைய வழி வாயிலாக மட்டும்** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| பதவியின் பெயர் | குறியீட்டு எண் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை (தோராயமாக) | சம்பள ஏற்ற முறை |
|---|---|---|---|
| 1. வனக்காப்பாளர் | 02 | 227 | நிலை—05<br>ரூ. 18,200/- முதல் - ரூ. 57,900/- வரை |
| 2. ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் | 03 | 93<br>(91 முன் கொணரப்பட்ட காலிபணியிடங்கள் உட்பட) | நிலை—05<br>ரூ. 18,200/- முதல் - ரூ. 57,900/-வரை |

## 2. காலிப்பணியிடங்களுக்கான பகிர்மானப் பட்டியல் (தோராயமானது)

| பதவி | பொதுப் பிரிவு | பிற்படுத்தப் – பட்டோர் | பிற்படுத்தப்– பட்டோர் (இஸ்லாமியர்) | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர்பழங்குடியினர் | ஆதி திராவிடர் | ஆதி திராவிடர் (அருந்ததியர்) | பழங்– குடியினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வனக்காப்பாளர் | 70 | 60 | 08 | 46 | 33 | 07 | 03 | 227 |
| ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் **(தற்போதைய காலி பணியிடங்கள்)** | - | 01 | - | 01 | - | - | - | 02 |
| ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் **(முன் கொணரப்பட்ட காலிபணியிடங்கள்)** | - | 38 | 02 | 25 | 21 | 04 | 01 | 91 |

இந்த காலிப்பணியிடங்களுக்கான முழு விவரங்கள் அடங்கிய பகிர்மானப் பட்டியல் இணைப்பு **1** மற்றும் **2**ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 3. தகவல் சிற்றேடு பதிவிறக்கம்

மேற்குறிப்பிட்டுள்ள நேரடி நியமனம் தொடர்பான முழு விவரங்கள் கொண்ட தகவல் சிற்றேடு தமிழ்நாடு வனத்துறை இணையதளம் முகவரியில் ( www.forests.tn.gov.in ) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தகவல் சிற்றேட்டில் உள்ள அனைத்து அறிவுரைகளையும் கவனமுடன் படித்த பின்பு விண்ணப்பத்தினை இணையவழி மூலம் சமர்ப்பிக்கவும்.

### 4. இணையவழி விண்ணப்பம்

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தினை தமிழ்நாடு வனத்துறை இணையதளம் ( www.forests.tn.gov.in ) மூலம் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். இதர வழிகளின் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**5. பணி விதிகள் :** தமிழ்நாடு வனச் சார்நிலைப் பணி விதிகள்.

### 6. (அ) முக்கியமான நாட்கள் (தோராயமானது)

| | | |
|---|---|---|
| i. | விளம்பர நாள் | 30.11.2019 |
| ii. | இணைய வழியாக விண்ணப்பிக்க ஆரம்ப நாள் | ஜனவரி–2020, 3–வது வாரம் |
| iii. | இணைய வழியாக விண்ணப்பிக்க கடைசி நாள் | பிப்ரவரி–2020, முதல் வாரம் |
| iv. | கணினி மூலம் இணைய வழியாக தேர்வு நடைபெறும் நாள் | மார்ச்–2020 |

### 6. (ஆ) தேர்வு நடத்தும் முறை – கொள்குறிவகைத் தேர்வு மட்டும்

| பாடத்திட்டம் | நேரம் மற்றும் கால அளவு | அதிகபட்ச மதிப்பெண் | தேர்ச்சி பெறுவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண் | |
|---|---|---|---|---|
| | | | பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு (இஸ்லாம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர்மரபினர், தாழ்த்தப்பட்ட வகுப்பு, தாழ்த்தப்பட்ட வகுப்பு (அருந்ததியர்) மற்றும் பழங்குடியினர் | பிற வகுப்பினர் |
| பொது அறிவு | 2 மணிநேரம் | 150 | **30%** | **40%** |

1. வினாத்தாள்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் இருக்கும்.
2. தமிழ் மற்றும் ஆங்கில வினாத்தாட்களில் முரண்பாடுகள் ஏதேனும் இருக்கும் பட்சத்தில் ஆங்கில வழி பதிப்பே இறுதியானது.
3. வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் தேர்விற்கான **பாடத்திட்டம்*** வனத்துறை இணையதளத்தில் www.forests.tn.gov.in வெளியிடப்பட்டுள்ளது.
   **குறிப்பு: * திருத்தியமைக்கப்பட்ட பாடத்திட்டம்.**

## 7. வயது வரம்பு (01-07-2019 அன்றுள்ளபடி)

| வ. எண் | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | குறைந்தபட்ச வயது (பூர்த்தியடைந்திருக்க வேண்டும்) | அதிகபட்ச வயது (பூர்த்தியடைந்திருக்க கூடாது) |
|---|---|---|---|
| 1. | "பொது" (அதாவது ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) தவிர) | 21 வயது | 30 வயதுக்குள் |
| 2. | ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்), பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் அனைத்து வகுப்புகளையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | 21 வயது | 35 வயதுக்குள் |
| 3. | முன்னாள் இராணுவத்தினர் (வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிகளுக்கு) | 21 வயது | 30 வயதுக்குள் (இராணுவப்பணி கழித்தது போக) |

வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிகளுக்கு நேரடி நியமனம் மூலம், முப்பது வயதிற்கு மிகாமல் (இராணுவப்பணியில் சேவைபுரிந்த காலத்தை கழித்து) உள்ள, தகுதி வாய்ந்த முன்னாள் இராணுவத்தினர் (துரைப்படை, விமானப்படை மற்றும் கடற்படை பிரிவில் பணியாற்றியவர்கள் மட்டும்) பணியமர்த்தப்படுவர்.

வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிகளுக்கான தேர்வில் ஏனைய தகுதிகள் சமமாக இருக்கும் பட்சத்தில் இராணுவத்திலிருந்து **(துரைப்படையில் பணியாற்றிவர்கள் மட்டும்)** வெளியேறியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## 8. கல்வித் தகுதிகள் : (அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளின்படி)

விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள கல்வித் தகுதியினை அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளன்று பெற்றிருத்தல் வேண்டும்.

### (அ) வனக்காப்பாளர்

1. மேல்நிலை பள்ளிப்படிப்பில் (+2) தேர்ச்சி பெற்றதுடன் இயற்பியல், வேதியியல், உயிரியல், விலங்கியல் அல்லது தாவரவியல் ஆகிய ஏதாவது ஒரு பாடத்தில் பயின்றிருக்க வேண்டும்.

2. இருப்பினும் இக்கல்வித்தகுதி **11.10.1982** அன்று மற்றும் அதற்கு முன்னர் வனக்காவலராக பணியமர்த்தப்பட்ட வனக்காவலர் மற்றும் வனவாழ் பழங்குடியின வகையனரைச்சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கு **(www.forests.tn.gov.in என்ற இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டியல்படி)** பொருந்தாது.

3. இருப்பினும் **11.10.1982** அன்று மற்றும் அதற்கு பின்னர் **12.11.1987**க்கு முன்னர் பணியமர்த்தப்பட்ட வனக்காவலர்கள் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் எட்டாம் வகுப்பு அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

4. இருப்பினும் **13.11.1987** அன்று மற்றும் அதற்கு பின்னர் வனக்காவலராக பணியமர்த்தப்பட்டவர்கள் குறைந்தபட்ச பொது கல்வித்தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

### (ஆ) ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்

1. மேல்நிலை பள்ளிப்படிப்பில் (+2) தேர்ச்சி பெற்றதுடன் இயற்பியல், வேதியியல், உயிரியல், விலங்கியல் அல்லது தாவரவியல் ஆகிய ஏதாவது ஒரு பாடத்தில் பயின்றிருக்க வேண்டும்.

2. தகுதிபெற்ற போக்குவரத்து ஆணையத்தால் வழங்கப்பட்ட செல்லத்தக்க ஓட்டுநர் உரிமத்தினை பெற்றிருக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரர் ஓட்டுநர் உரிமம் பெறப்பட்ட பின்னர் தகுதிபெற்ற ஒரு நிறுவனத்தில் இலகுரக இயந்திர ஊர்தி / கனரக இயந்திர ஊர்தி இயக்கும்* பயன்பாட்டில் மூன்றாண்டிற்கு குறைவில்லாத காலம் பணி முடித்ததற்கான அனுபவச் சான்றிதழினை பெற்றிருக்க வேண்டும். மோட்டார் வாகன பொது பழுதுநீக்கம் குறித்த அடிப்படை அனுபவத்தினை பெற்றிருக்க வேண்டும்.

4. தமிழ்நாட்டில் ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் வழங்கப்பட்ட முதலுதவிச் சான்றிதழினை பெற்றிருத்தல் வேண்டும்.

5. கண் கண்ணாடி அணியாமல் குறிப்பிடப்பட்ட அளவிற்கு குறையாமல் பார்வைத்திறன் தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

**(a)**

| | வலது கண் | இடது கண் |
|---|---|---|
| தூரப்பார்வை | 6/6 | 6/6 |
| கிட்டப்பார்வை | 0.5 | 0.5 (ஸ்னெலன்) |

I. ஒவ்வொரு கண்ணிலும் முழுப்பார்வைத்திறன் தகுதியினை பெற்றிருக்க வேண்டும்.

II. நிறக்குருடு, ஓரக்கண் பார்வை அல்லது நோயுற்ற கண் அல்லது ஏதாவது ஒரு கண்ணில் நோயுற்ற விண்ணப்பதாரர்கள் இப்பணிக்கு தகுதியற்றவராக கருதப்படுவர்.

III. ஏதாவது ஒரு கண்ணில் லேசிக் (Lasik) / லேசர் (Laser) அறுவை சிகிச்சை / எக்ஸ்மைர் (Excimer) லேசர் அறுவை சிகிச்சை மேற்கொண்ட விண்ணப்பதாரர்கள் இப்பணிக்கு தகுதியற்றவராக கருதப்படுவர்.

IV. விண்ணப்பதாரர்கள் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் மேற்காண் பட்டியலில் (a) குறிப்பிடப்பட்டுள்ள பார்வைத்திறன் குறித்த தகுதிச் சான்றிதழினை பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு : * –**தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமமானது நிபுணர்களின் உதவியுடன் ஓட்டுநர் தேர்வை நடத்தும்.

## 9. திருநங்கைகளுக்கு (மூன்றாம் பாலினத்தவர்கள்) உரிய சிறப்பு சலுகைகள்:

அ) மனுதாரர்கள் திருநங்கை என்ற இனத்தின்கீழ் மனு செய்வாராயின் அவர்களுக்கு பெண்களுக்குரிய இட ஒதுக்கீடு / பொதுப்பிரிவினருக்குரிய இட ஒதுக்கீட்டில் பணியமர்த்தப்படுவர்.

ஆ) திருநங்கை இனத்தவர் பெண் மனுதாரர் என மனு செய்வாராயின் தமிழ்நாடு அரவாணிகள் நலவாரியத்தால் வழங்கப்படும் அடையாள அட்டையில் சுய உறுதி சான்றளிக்க வேண்டும். இவர்களுக்கு பெண்களுக்குரிய ஒதுக்கீடு மற்றும் பொதுப்பிரிவினருக்கான ஒதுக்கீடு பொருந்தும்.

இ) திருநங்கை இனத்தவர் ஆண் மனுதாரர் என மனு செய்வாராயின் தமிழ்நாடு அரவாணியர்கள் நல வாரியத்தால் வழங்கப்படும் அடையாள அட்டையில் சுய உறுதி சான்றளிக்க வேண்டும். இவருக்கு பொதுப்பிரிவினருக்கான ஒதுக்கீடு பொருந்தும்.

மேலும், திருநங்கை இனத்தவர்கள் ஆண் மனுதார் என மனு செய்பவராயின் ஆண்களுக்குரிய உடற்தகுதி தேர்வு மற்றும் உடற்திறன் தேர்வு முறைகள் பொருந்தும் திருநங்கை இனத்தவர் பெண் /மூன்றாம் பாலினத்தவர் என மனு செய்வாராயின் பெண்களுக்குரிய உடற்தகுதி தேர்வு மற்றும் உடற்திறன் தேர்வு முறைகள் பொருந்தும்.

மேலும், திருநங்கை வனவாழ் பழங்குடியின இனத்தவராயின் தமிழ்நாடு வனச்சார்நிலைப்பணி விதிகளில் குறிப்பிட்டுள்ள சிறப்பு விதிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி விதிகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம் 14/2016)ன்படி அளிக்கப்படும் சாதிச்சான்று கொண்டவராயின் வனவாழ் பழங்குடியினர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கான உடற்தகுதி தேர்வு முறைகள் பொருந்தும்.

ஈ) திருநங்கைகளுக்கு இன வகை கண்டறிதல்

(அ) திருநங்கை மனுதாரர் சாதிச்சான்று ஏதும் கொண்டிருக்காவிடில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்படுவர்.

(ஆ) திருநங்கை மனுதாரர் ஆதிதிராவிடர்/ஆதிதிராவிடர் (அருந்ததியர்) / பழங்குடியினர் என சாதி சான்று கொண்டிருப்பாரானால் அந்தந்த இனங்களுக்குரியவாராக கருதப்படுவர்.

(இ) திருநங்கை மனுதாரர் ஆதி திராவிடர் / ஆதிதிராவிடர் (அருந்ததியர்) / பழங்குடியினர் தவிர்த்து இதர இனங்களுக்குரிய சாதிச்சான்று கொண்டிருப்பாரானால் அந்தந்த இனங்களுக்குரிய ஒதுக்கீடு அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்குரிய ஒதுக்கீட்டில் மனுதாரருக்கு எது பயனுடையதோ அந்த இன ஒதுக்கீடு முறைக்கு மனுதாரர் விருப்பம் தெரிவிக்கலாம். ஒரு முறை மனுதாரர் விருப்பம் அளித்தபின் அதுவே இறுதியானதாகக் கருதப்படும். எதிர்காலத்தில் விருப்பத்தினை மாற்றம் செய்துகொள்ள இயலாது.

## 10. உடற்தகுதி மற்றும் உடற்திறன் தேர்வு:

### (i) உடற்தகுதி தேர்வு

விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் குறைந்தபட்ச உடற்தகுதியை கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும்.

| இனம் | உயரம் (செ.மீ.) | மார்பளவு (செ.மீ.) | |
|---|---|---|---|
| | | இயல்பு நிலையில் | விரிந்த நிலையில் |
| ஆண் | 163 | 79 (மார்பை சுற்றி) மூச்சு வெளியிட்ட நிலையில் | 05 (மூச்சு உள் வாங்கும் நிலையில்) |
| பெண் மற்றும் திருநங்கைகள் | 150 | 74 (மார்பை சுற்றி) மூச்சு வெளியிட்ட நிலையில் | 05 (மூச்சு உள் வாங்கும் நிலையில்) |

தமிழ்நாடு வனச்சார்நிலைப் பணி விதிகளில் குறிப்பிட்டுள்ள வனவாழ் பழங்குடியின விண்ணப்பதாரர்கள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி முறைமைகள்) சட்டம் 2016, பிரிவு 3 (X)ல் குறிப்பிட்டுள்ள பழங்குடியின விண்ணப்பதாரர்கள் கீழ்க்காணும் குறைந்தபட்ச உயரம் பெற்றிருக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| ஆண் விண்ணப்பதாரர் | - | 152 செ.மீ. |
| பெண் மற்றும் திருநங்கை விண்ணப்பதாரர் | - | 145 செ.மீ. |

மேற்குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச உடற்தகுதிகளைப் பெற்றிருப்பவர்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் ஆவர்.

குறிப்பு: வனவாழ் பழங்குடியினர் பட்டியல் www.forests.tn.gov.in என்ற இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

### (ii) உடல் அளவீட்டிற்கான சான்றிதழ்

அரசால் பணி நியமனம் செய்யப்பட்ட உதவி அறுவை சிகிச்சை நிபுணர் நிலைக்கு மேல் உள்ள மருத்துவரிடமிருந்து கீழ்குறிப்பிட்ட விவரங்களை கொண்ட மருத்துவ சான்றிதழை தேர்வு அறிவிக்கை நாளன்றோ அல்லது அதற்கு பின்னரோ பெறப்பட்டு, கேட்கப்படும் பொழுது தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(1) உயரம் …..செ.மீ.

(2) மார்பு அளவீடுகள்

- (i) மூச்சு உள் வாங்கும் நிலையில் …..செ.மீ.
- (ii) மூச்சு வெளியிட்ட நிலையில் …..செ.மீ.
- (iii) வித்தியாசம் (விரிவடைதல்) …..செ.மீ.

(அளவீடுகள் மெட்ரிக் முறையில் மட்டும் குறிப்பிட்டிருக்க வேண்டும்)

**(iii) உடற்திறன் தேர்வு**

விண்ணப்பதாரர்கள் கீழ் குறிப்பிட்ட துாரத்தினை நான்கு மணி நேரத்திற்குள் வெற்றிகரமாக நடந்து கடக்க வேண்டும்.

| | |
|---|---|
| ஆண் விண்ணப்பதாரர்கள் | …… 25 கி.மீ. |
| பெண் மற்றும் திருநங்கை விண்ணப்பதாரர்கள் | ……16 கி.மீ. |

விண்ணப்பதாரர்களின் உடல் தகுதி மற்றும் வனத்துறையில் கடினமான வெளிப்புற வேலைகளை செய்யும் திறன் பெற்றவர் என சென்னையில் உள்ள மருத்துவக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## 11. பொது தகவல்கள்

A) இட ஒதுக்கீடு தொடர்பான விதிகள் இந்த நியமனத்திற்கு பொருந்தும் மற்றும் காலிப்பணியிட விவரங்கள் தற்போது நடைமுறையில் உள்ள விதிகளின்படி பின்பற்றப்படும்.

B) மாற்றுத்திறனாளிகளுக்கான இட ஒதுக்கீட்டு விதிகள் இந்த நியமனத்திற்கு பொருந்தாது.

C) பட்டியல்–5ல் உள்ள ஆதி திராவிடர் (அருந்ததியர்) வகுப்பினருக்கான ஒதுக்கீடு இடங்கள் முன்னுரிமையில் நிரப்பப்பட்ட பின்னர் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் மிகுதியாக இருந்தால், அவர்கள் ஆதி திராவிடர் வகுப்பினருக்கான ஒதுக்கீட்டின் கீழும் தேர்வு செய்யப்படுவார்கள். ஆதி திராவிடர் (அருந்ததியர்) இட ஒதுக்கீட்டின் கீழ் நிரப்ப தகுதியான விண்ணப்பதாரர்கள் இல்லாதபட்சத்தில், அப்பதவியிடங்கள் ஆதி திராவிடர் (அருந்ததியர்) வகுப்பினரல்லாத பிற ஆதி திராவிடர் வகுப்பினைச் சார்ந்த தகுதியான விண்ணப்பதாரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

D) பெண்களுக்கான 30% இட ஒதுக்கீடு இத்தேர்விற்கு பொருந்தும். தகுதி வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில் அந்த பணியிடங்கள் அந்தந்த வகுப்பினை சார்ந்த பிற விண்ணப்பதாரர்களை கொண்டு நிரப்பப்படும்.

E) பெண்களுக்கான 30% இட ஒதுக்கீட்டில் ஆதரவற்ற விதவைகளுக்காக 10% இட ஒதுக்கீடு உள் ஒதுக்கீட்டு முறையில் நிரப்பப்படும்.

F) தற்போது நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி திருநங்கைகளுக்கான வேலைவாய்ப்பளிப்பதற்குரிய இட ஒதுக்கீடு முறை கடைபிடிக்கப்படும்.

G) தற்போது நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி, காலிப்பணியிடங்களில் 5% முன்னாள் இராணுவத்தினரின் மூலம் நிரப்பப்படும்.

H) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இப்பதவிக்குரிய அறிவிக்கை நாளன்று போதுமான தமிழறிவு பெற்றிருக்க வேண்டும்.

I) அரசு ஆணை(நிலை) எண். 145, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.09.2010–இல் நேரடி நியமனத்தின் மூலம் நிரப்பப்பட உள்ள காலிப் பணியிடங்களில் 20% (சதவீதத்தை) பணியிடங்கள் நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதியினை தமிழ் வழியில் பயின்றவர்களைக் கொண்டு முன்னுரிமையளித்து நிரப்ப அரசு ஆணையிட்டுள்ளது. **தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான முன்னுரிமை** அடிப்படையிலான

20% இட ஒதுக்கீட்டு விதி இத்தேர்விற்கு பொருந்தும். அரசு ஆணை நிலை எண். 40, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை, நாள் 30.04.2014–இல் தமிழ்வழியில் பயின்றவர்களுக்கான திருத்தி அமைக்கப்பட்ட இட ஒதுக்கீட்டு வழிமுறைகள் விவரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, தமிழ்வழியில் பயின்றவர்களுக்கான (Person Studied in Tamil Medium) முன்னுரிமையைப் பெற விண்ணப்பதாரர்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதியினை தமிழ்வழியில் பயின்று அதற்குரிய சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். மேலும், தமிழ்வழியில் பயின்ற விண்ணப்பதாரர்கள் இல்லாத நிலையில், முன்னுரிமைக்கென ஒதுக்கப்பட்ட காலிப்பணியிடங்கள் முன்னுரிமை நீக்கப்பட்டு பிற தகுதிகளைக் கொண்டு அந்தந்த வகுப்பினரைக் கொண்டு நிரப்பப்படும். தமிழ் வழியில் பயின்றவர்களுக்கான படிவம் தகவல் சிற்றேட்டில் இணையதளத்தில் www.forests.tn.gov.in வெளியிடப்பட்டுள்ளது.

J) தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான 10% பணியிடங்கள் நடைமுறையிலுள்ள விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சுழற்சி வரிசையைப் பின்பற்றி விளையாட்டு வீரர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

K) கைது செய்யப்பட்டிருத்தல், குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டிருத்தல், வேலைக்கு ஆட்கள் தெரிவு செய்யும் ஏதேனும் ஒரு முகமையினால் தடை/ தகுதியின்மை செய்யப்பட்டிருத்தல், குற்ற நடவடிக்கை (அல்லது) ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப்பட்டிருத்தல் / முடிவுற்றிருத்தல், கிளர்ச்சி (அல்லது) ஏதேனும் அரசியலமைப்பில் பங்கேற்று பாராளுமன்ற / மாநில சட்டசபை / உள்ளாட்சி தேர்தல்களில் பங்கேற்றல் ஆகியவற்றுடன் தொடர்புடைய தகவல்களை, விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், தீர்ப்பின் அசல் / ஆணை / அரசாணை / துறை நடவடிக்கை கைவிடப்பட்ட அரசாணை அல்லது இதர ஆவணங்களை சான்றிதழ் சரிபார்ப்பின் போதும் கலந்தாய்வின் போதும் தவறாமல் சமர்பிக்க வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர், நியமனம் பெறும் காலம் வரை எப்போது ஏற்பட்டிருப்பினும் உடனடியாக தேர்வுக்குழுமத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். தவறினால், இன்றியமையாத தகுந்த தண்டனைக்குரிய நடவடிக்கையை தேர்வுக்குழுமம் எடுக்கும்.

L) இட ஒதுக்கீடு குறித்த தவறான தகவல்கள் / தகுதிக்கான காரணிகளான வயது, வகுப்பு பிரிவுகள், கல்வித் தகுதி, உடற்தகுதி போன்ற அடிப்படைத் தகுதிகள் குறித்த தவறான தகவல்கள் கொண்ட விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் **நிராகரிக்கப்படும்.**

M) இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட கோரிக்கைகளுக்கான ஆவணச் சான்றுகளை தேர்வுக்குழுமம் கேட்கும் நேரத்தில் பதிவேற்ற / சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் தெரிவிக்கப்படாமல் பின்னர் கோரப்படும் எந்தவொரு மாற்றமும், கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. குறிப்பிட்ட காலநேரத்திற்குள் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

N) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை, தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் பின்பற்றும்.

O) **தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் அரசின் விதிகள் மற்றும் கொள்கைகளை, நியமனம் மற்றும் இதர விசயங்களில் பின்பற்றும்.**

P) இப்பதவிக்குரிய தெரிவு தொடர்பாக, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஏதேனும் வழக்குகள் நிலுவையில் இருப்பின், அவற்றின் மீதான இறுதி ஆணைகளுக்குட்பட்டு தற்காலிகமாக தெரிவு செய்யப்படும்.

**குறிப்பு:** C முதல் J வரையிலானவை தொடர்பான கூடுதல் விபரங்கள் www.forests.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ள தகவல் சிற்றேட்டில் வழங்கப்பட்டுள்ளது.

## 12. தேர்வு மையம் :–

இத்தேர்வானது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும். தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்திற்கு தேர்வு மையங்களின் எண்ணிக்கையை மாற்றுவதற்கான உரிமை உள்ளது. மாவட்டங்கள் குறித்தான விபரம் தகவல் சிற்றேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 13. தெரிவு செய்யும் முறை :-

இணையவழி எழுத்துத் தேர்வில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பு, உடற்தகுதி மற்றும் உடற்திறன் (நடைத்தேர்வு) தேர்விற்கு 1:3 என்ற விகிதாசார அடிப்படையில் அழைக்கப்படுவார்கள்.

## 14.தேர்வுக்கட்டணம் : -

வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிகளுக்குரிய தேர்வுக்கட்டணம் ஒவ்வொரு விண்ணப்பதாரரிடமிருந்தும் முறையே, ஆதி திராவிடர்/ பழங்குடியினர் வகுப்பினருக்கு ரூ.150/- (சேவைக்கட்டணம் உட்பட) மற்றும் இதர வகுப்பினருக்கு ரூ.300/– (சேவைக்கட்டணம் உட்பட) என்ற முறையில் வசூலிக்கப்படும்.

## 15. கட்டணம் செலுத்தும் முறை :–

**இணையவழி மூலம் மட்டுமே கட்டணம் செலுத்த வேண்டும்.**

**கேட்புக் காசோலை / தபால் ஆணை போன்ற இணைய வழி அல்லாத முறையில் தேர்வுக்கட்டணம் செலுத்த அனுமதிக்கப்படமாட்டாது.**

## 16. விண்ணப்பிக்கும் முறை:-

i. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை தமிழ்நாடு வனத்துறை இணையதளத்தில் www.forests.tn.gov.in **இணைய வழியில் மட்டுமே** விண்ணப்பிக்க வேண்டும்.

ii. விண்ணப்பிப்பதற்கு முன்பு, தங்களது வசதிக்காக ஸ்கேன் செய்யப்பட்ட தங்களது நிழற்படத்தையும், கையொப்பம் மற்றும் உரிய சான்றிதழ்களை CD/DVD/Pen drive ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் தயாராக வைத்திருக்க வேண்டும்.

iii. தகவல் சிற்றேட்டில் குறிப்பிட்டுள்ளவாறு விண்ணப்பதாரர், அண்மையில் எடுக்கப்பட்ட கடவுச்சீட்டளவுள்ள நிழற்படம் (JPG/JPEG format of Size 20-50 KB) மற்றும் கையொப்பத்தினை (JPG/JPEG format of Size 10-20 KB) தனித்தனியே வைத்திருத்தல் வேண்டும். நிழற்படம் மற்றும் கையொப்பம் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

iv. நடப்பில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண்ணை பதிவு செய்வது அவசியம். மேலும் தேர்வு முடிவுகள் வெளியிடும் வரையில் மின்னஞ்சல் முகவரி மற்றும்

கைப்பேசி எண்ணை செயல்பாட்டில் வைத்திருக்க வேண்டும். ஒரு விண்ணப்பத்திற்கு ஒரு மின்னஞ்சல் முகவரி மற்றும் ஒரு கைப்பேசி எண்ணை மட்டுமே உபயோகிக்க வேண்டும். வெவ்வேறு விண்ணப்பதாரர்கள் ஒரே மின்னஞ்சல் முகவரி மற்றும் ஒரே கைப்பேசி எண்ணை உபயோகிப்பாராயின் அவர்களது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது / நிராகரிக்கப்படும்.

v. விண்ணப்பதாரர்கள் உரிய சான்றிதழ்களை (முன்னாள் இராணுவத்தினர் / தமிழ் வழி கல்வி பயின்றோர் / விளையாட்டு / திருநங்கை/ ஆதரவற்ற விதவைகள்) விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

vi. இணையவழி விண்ணப்பத்தில் கூறப்பட்டுள்ள விவரங்களான விண்ணப்பதாரரின் பெயர், வகுப்பு, கல்வித்தகுதி, பிறந்த நாள், முகவரி, மின்னஞ்சல் முகவரி, தேர்வு மையம் ஆகியவை இறுதியானதாக கருதப்படும். மொத்தமாக குறுஞ்செய்தி அனுப்புவதற்காக SMS gateway பெறப்பட்ட பிறகு மேற்கூறிய விவரங்களை மாறுதல் செய்ய இயலாது. விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்களை மாறுதல் செய்ய இயலாததால் விண்ணப்பதாரரர்கள் விண்ணப்பிக்கும்போது மிகுந்த கவனத்துடன் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களில் மாறுதல் செய்ய வேண்டி பெறப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

vii. **இணையவழி விண்ணப்பம்**:

1) விண்ணப்பதாரர்கள் முதலில் தமிழ்நாடு வனத்துறையின் இணையதளம் www.forests.tn.gov.in இல் உள்நுழைய வேண்டும்
   (i) "TNFUSRC recruitments" என்ற புள்ளியை தேர்வு செய்யவும்.
   (ii) விண்ணப்பிக்க வேண்டிய பதவியின் பெயரை தேர்வு செய்ய வேண்டும்.
2) விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்யும் முன்பாக நகல் எடுத்து பதிவுகள் சரியாக உள்ளனவா என்பதை சரிபார்க்க வேண்டும். ஒருமுறை பதிவேற்றம் செய்தபின்பு திருத்தம் செய்ய இயலாது. ஆகையால் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும்போது மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும்.

**Viii. நகல் விருப்பம்:-**

1) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்பு அதனை நகல் எடுத்துக்கொள்ளலாம் / **PDF** வடிவத்தில் சேமித்துக்கொள்ளலாம்.

2) தேவைப்பட்டால் பயனாளர் எண் மற்றும் கடவுச் சொல்லை பயன்படுத்தி விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் / நகல் எடுத்துக்கொள்ளலாம்.

3) இணையவழி விண்ணப்பத்தின் நகல் அல்லது இதர ஆவணங்களை தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்திற்கு அனுப்பத் தேவையில்லை. தேர்வின் அடுத்தகட்டத்திற்கு விண்ணப்பதாரர்கள் வரும்போது மட்டும் விண்ணப்பங்கள் மற்றும் சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும்.

குறிப்பு:–

(i) விண்ணப்பதாரர்கள், தமிழ்நாடு வனத்துறை இணையதளத்தின் அதிகப்படியான நெரிசலின் காரணமாக இணையதொடர்பு துண்டிப்பு / இயலாமை / தோல்வி போன்ற சாத்தியங்களை தவிர்க்க விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் வரை காத்திருக்காமல் முன் கூட்டியே விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ii) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பித்த பின்பு மாறுதல் செய்ய வேண்டி பெறப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அதனால் மிகுந்த கவனத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(iii) விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு உரிய இடத்தில் கவனத்துடன் பதிவு செய்து இறுதியில் சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிப்பதற்கு முன்பு கொடுக்கப்பட்ட அனைத்து விவரங்களும் சரியானவைதானா என்பதை உறுதி செய்து கொள்ள விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். விண்ணப்பதாரரின் பெயர்/ தகப்பனார் பெயர் / துணைவர் முதலிய விவரங்களை எழுத்துப்பிழை இல்லாமல் மதிப்பெண் சான்றிதழ் / இதர சான்றிதழில் உள்ளபடி பதிவு செய்ய வேண்டும். மாற்றம் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(iv) இணையதள விண்ணப்பத்தில் மாற்றம் செய்ய வேண்டி பெறப்படும் விண்ணப்பங்கள் எந்நிலையிலும் பரிசீலிக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேவையான விவரங்கள் / தகவல்கள் தவறானதாக அல்லது முழுமை பெறாதவையாக இருந்தால் அதற்கு தேர்வுக் குழுமம் பொறுப்பாகாது.

(v) இணையவழி தேர்வு கட்டணம் செலுத்தும் முறையில் தோல்வி ஏற்படின் அதற்கு தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் பொறுப்பாகாது.

(vi) மேற்கூறிய காரணங்களால் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க இயலாத நிலை அல்லது வேறு ஏதாவதொரு காரணத்தினால் சமர்ப்பிக்க இயலாத நிலைக்கு தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் பொறுப்பேற்காது.

**17. இதர முக்கிய அறிவுரைகள்:-**

a) விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்திற்கு www.forests.tn.gov.in என்ற இணையதளத்தை பயன்படுத்தவும்.

b) தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் இத்தேர்விற்கான அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ளனரா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

c) விண்ணப்பதாரர்கள் தேவையான சான்றிதழ்களை மட்டும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

d) தகுதியுள்ள விண்ணப்பதாரர்களின் நுழைவுச்சீட்டு தமிழ்நாடு வனத்துறை இணையதளத்தின் (www.forests.tn.gov.in) மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பதாரர்களுக்கு நுழைவுச் சீட்டானது தபாலில் அனுப்பப்படமாட்டாது. எனவே, விண்ணப்பதாரர்கள் தேர்வு நாளுக்கு முன்னதாகவே தமிழ்நாடு வனத்துறை இணையதளத்தை பார்க்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

e) **தேர்வு அறையில் நடந்துகொள்ளும் முறை:** தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய கணினியைப் பார்த்து பதிலளித்தல் / பார்க்க அனுமதித்தல் அல்லது வேறு ஏதேனும் முறையற்ற உதவிகளைப் பெறவோ அல்லது பெற முயற்சிக்கவோ

அல்லது அத்தகைய முறையற்ற உதவிகளைத் தரவோ அல்லது தர முயற்சிக்கவோ கூடாது.

f) தேர்வு எழுதும் எந்தவொரு விண்ணப்பதாரரும் தேர்வுக் கூடத்தில் தவறான நடவடிக்கையிலோ அல்லது தேர்வினை சீர்குலைக்கும் நோக்கத்திலோ அல்லது தேர்வுக்குழுமத்தால் தேர்வினை நடத்த பணியில் அமர்த்தப்பட்ட அலுவலர் / பணியாளர்களை தாக்கும் முயற்சியிலோ ஈடுபடக் கூடாது. அவ்வாறு ஈடுபடும் விண்ணப்பதாரர்களின் செயல்கள் கடுமையான தவறாக கருதப்பட்டு, அவ்விண்ணப்பதாரர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

g) ஒவ்வொரு நிலையிலான அனுமதியும் விண்ணப்பதாரர்களின் தகுதி நிறைவானதென உறுதி செய்யப்படும் வரை தற்காலிகமானது.

h) தேர்வு எழுத அனுமதி வழங்குவதால் மட்டுமே அவர்களின் விண்ணப்பம் தேர்வுக் குழுமத்தால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என கருதப்படமாட்டாது.

i) விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு தேர்வு நிலைக்கும் (இணையவழித் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு / உடல் தகுதித் தேர்வு மற்றும் உடல் திறன் தேர்வு) அனுமதிப்பது என்பது முற்றிலும் தற்காலிகமானது. ஏதாவதொரு நிலையில் அறிவிக்கப்பட்ட பதிவியிடத்திற்குரிய தகுதிகளை பெற்றிருக்கவில்லை எனக் கண்டறிந்தால் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் நிராகரிக்கப்படும் / இரத்து செய்யப்படும்.

j) **அறிவிக்கை செய்யப்பட்ட நாளிலிருந்து தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் நாள் வரை இந்நேரடி நியமனம் குறித்தான தகவல்கள் ஏதும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் வழங்கப்படமாட்டாது.**

**18. எச்சரிக்கை:-**

(i) தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களும் தகுதியின் அடிப்படையில் மட்டுமே நிரப்பப்படும்.

(ii) பணிநியமனம் பெற்றுத்தருவது குறித்து மோசடி தரகர் மற்றும் ஏஜெண்டுகளின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம் என தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் எச்சரிக்கை செய்கிறது.

(iii) மோசடித் தரகர் மற்றும் ஏஜெண்டுகளால் மேற்கொள்ளப்பட்ட ஏமாற்றங்களால் ஏற்பட்ட இழப்புகளுக்கு எவ்விதத்திலும் தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் பொறுப்பேற்காது.

(iv) பணிநியமனம் பெறுவது தொடர்பாக விண்ணப்பதாரர்கள் தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமத்தின் தலைவர் / உறுப்பினர் / உறுப்பினர் செயலர் / இதரப்பணியாளர்கள் ஆகியோருக்கு நேரடியாகவோ / தபால் மூலமாகவோ / உறவினர்கள், நண்பர்கள், புரவலர்கள், உயரதிகாரிகள் அல்லது இதர நபர்கள் மூலமாகவோ செல்வாக்கு ஏதேனும் பயன்படுத்தினால் அவர்களது விண்ணப்பம் எவ்வித முகாந்திரமுமின்றி நிராகரிக்கப்படும்.

(மேலும் கூடுதல் தகவல்களுக்கு தேர்வுக் குழுமத்தின் "தகவல் சிற்றேடு" என்ற தலைப்பில் தமிழ்நாடு வனத்துறை இணையதளத்தில் (www.forests.tn.gov.in) வெளியிடப்பட்டுள்ளதைக்

காணலாம்.

**19.** இப்பணி நியமனம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம் எடுக்கும் முடிவே இறுதியானதாகும்.

**உறுப்பினர், தநாவசீபதேகு.**

**ANNEXURE – I**

**Forest Guard – Distribution Vacancies – 227 posts**

**GENERAL**

| Sl. No | Category | Total | Grand Total |
|---|---|---|---|
| 1 | GT - GENERAL | 34 | 70 |
| 2 | GT - PSTM | 8 | |
| 3 | GT - WOMEN | 15 | |
| 4 | GT - W - PSTM | 4 | |
| 5 | GT - SPORTS | 2 | |
| 6 | GT - DW | 2 | |
| 7 | GT - EX- SPORTS | 3 | |
| 8 | GT - PSTM - SPORTS | 1 | |
| 9 | GT - EX- PSTM - SPORTS | 1 | |

**BACKWARD CLASSES**

| Sl. No | Category | Total | Grand Total |
|---|---|---|---|
| 1 | BC - GENERAL | 29 | 60 |
| 2 | BC - PSTM | 7 | |
| 3 | BC - WOMEN | 12 | |
| 4 | BC - W - PSTM | 4 | |
| 5 | BC - SPORTS | 2 | |
| 6 | BC - DW | 1 | |
| 7 | BC - EX - SPORTS | 2 | |
| 8 | BC - PSTM - SPORTS | 1 | |
| 9 | BC - DW - PSTM | 1 | |
| 10 | BC - EX - PSTM - SPORTS | 1 | |

**MOST BACKWARD CLASSES / DENOTIFIED TRIBES**

| Sl. No | Category | Total | Grand Total |
|---|---|---|---|
| 1 | MBC/DT - GENERAL | 22 | 46 |
| 2 | MBC/DT - PSTM | 6 | |
| 3 | MBC/DT - WOMEN | 10 | |
| 4 | MBC/DT - W - PSTM | 2 | |
| 5 | MBC/DT - SPORTS | 2 | |
| 6 | MBC/DT - DW | 1 | |
| 7 | MBC/DT - EX - SPORTS | 2 | |
| 8 | MBC/DT - EX - PSTM - SPORTS | 1 | |

**BACKWARD CLASS (MUSLIMS)**

| Sl. No | Category | Total | Grand Total |
|---|---|---|---|
| 1 | BC (M) - GENERAL | 3 | 8 |
| 2 | BC (M) - PSTM | 1 | |
| 3 | BC (M) - WOMEN | 1 | |
| 4 | BC (M) - W - PSTM | 1 | |
| 5 | BC (M) - EX | 1 | |
| 6 | BC (M) - SPORTS | 1 | |

**SCHEDULED CASTES**

| Sl. No | Category | Total | Grand Total |
|---|---|---|---|
| 1 | SC - GENERAL | 16 | 33 |
| 2 | SC - PSTM | 4 | |
| 3 | SC - WOMEN | 7 | |
| 4 | SC - W - PSTM | 2 | |
| 5 | SC - SPORTS | 1 | |
| 6 | SC - DW | 1 | |
| 7 | SC - EX - SPORTS | 1 | |
| 8 | SC - PSTM - SPORTS | 1 | |

**SCHEDULED CASTE (ARUNTHATHIYARS)**

| Sl. No | Category | Total | Grand Total |
|---|---|---|---|
| 1 | SC(A) - GENERAL | 4 | 7 |
| 2 | SC(A) - PSTM | 1 | |
| 3 | SC(A) - WOMEN | 2 | |

**SCHEDULED TRIBES**

| Sl. No | Category | Total | Grand Total |
|---|---|---|---|
| 1 | ST - WOMEN | 1 | 3 |
| 2 | ST - PSTM | 1 | |
| 3 | ST - EX - SPORTS - PSTM | 1 | |

**Member, TNFUSRC**